DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 680-2024

Deposition of Witness for P.W. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | கோடீஸ்வரராவ் | **தாலுகா** | : | Rajapalayam |
| **த.பெ.** | : | நாகேஸ்வரராவ் | **தொழில்** | : | |
| **ஊர்** | : | Rajapalayam | **வயது** | : | 40 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 16.02.2026

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் IDBI வங்கி, இராஜபாளையம் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்தது. எங்கள் வங்கியில் எதிரி சேமிப்பு கணக்கு எண்.1204104000048365 வைத்துள்ளார். அந்த சேமிப்பு கணக்கு பட்டியல் 01.06.2024 முதல் 01.09.2024 வரை தாக்கல் செய்கிறேன். அது **<u>சா.சா.ஆ.1</u>** ஆகும். சா.சா.ஆ.1 ஆவணத்தின் படி 11.07.2024 அன்று மேற்சொன்ன வங்கி கணக்கின் இருப்பு தொகை 7 ரூபாய் இருந்தது. பு.சா.ஆ.1 காசோலை எங்கள் வங்கியால் மேற்படி வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட காசோலை ஆகும். பு.சா.ஆ-1 காசோலை எங்கள் வங்கியில் வசூலுக்கு வந்த சமயம் Positive Pay Confirmation என்ற அறிவுரை மேற்படி வங்கி கணக்கின் வாடிக்கையாளரிடம் இருந்து கிடைக்க பெறவில்லை என்பதால் மேற்படி காசோலை பரிசீலிக்க எடுக்கப்படவில்லை. அவ்வாறு Positive Pay Confirmation செய்யவேண்டிய பொறுப்பு அந்த வங்கி கணக்கின் வாடிக்கையாளருக்கு உண்டு என்றால் காசோலை தொகை ரூ.5 லட்சத்திற்கு மேல் இருந்தால் உண்டு.

காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த நபருக்கு Positive Pay Confirmation காசோலை வழங்கிய நபர் வங்கிக்கு கொடுத்திருந்தாலும் கொடுக்கவில்லை என்றாலும் தெரியாது. மற்றபடி பு.சா.ஆ.1 காசோலை செல்லக்கூடிய காசோலை என்றால் சரி. காசோலை தேதியில் இருந்து 3 மாத காலத்திற்குள் செல்லக்கூடிய காசோலைதான். பு.சா.ஆ-1 காசோலை எங்கள் வங்கிக்கு அந்த 3 மாத காலத்திற்குள் வசூலுக்கு வந்தது என்றால் சரி.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

Advice Not Received என்பது purely technical Reason என்றால் சரி. Advice Not Received என்பது அந்த வங்கி கணக்கில் பணம் இல்லை என நேரடியாக அர்த்தம் இல்லை என்றால் சரி. அவ்வாறு Advice Not Received என காசோலை திருப்பப்பட்டால் அந்த காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த நபர் காசோலையை வரைந்த நபரிடம் அறிவுரைக் கேட்டு காசோலையை மறுபடியும் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரி.

IDBI BANK LTD.
Authorised Signatory
Rajapalayam Branch

அவ்வாறு கட்டாயம் செய்யவேண்டும் என்றால் அது அந்த நபரின் விருப்பம். Advice Not Received என்பது நிதி சம்மந்தப்பட்ட காரணம் இல்லை என்றாலும் technical Reason என்றாலும் சரி. என்னிடம் காட்டப்படுவது எதிரி எங்கள் வங்கிக் கிளையில் பராமரிக்கும் வங்கி கணக்கின் கணக்கு பட்டியல் என்றால் சரி. அது **<u>எ.சா.ஆ.1</u>** ஆகும். எ.சா.ஆ.1 கணக்கு பட்டியலில் 22.02.2021 அன்று ரூ.2 லட்சம் அந்த வங்கிக் கணக்கிற்கு NEFT பரிவர்த்தனை எண்.SBIN321053208587–ன் படி வரப்பட்டுள்ளது.

कृते आईडीबीआई बैंक लिमिटेड
For IDBI BANK LTD.
प्राधिकृत हस्ताक्षरकर्ता Authorised Signatory
राजपालयम शाखा Rajapalayam Branch

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

16/2/24

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.